**E.P. No. 39/2018**

**எ.ம.சா.1 : ஜோசப் ; த/பெ. அந்தோனி**

நாள் : 17.11.2025

**<u>மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>:**

1. இந்த நிறைவேற்று மனுவானது எனது தாயார் எலிசபெத் ஆண்டனி என்பவருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட அசல் வழக்கு எண் 04/1988-ல் பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பாணையின் அடிப்படையில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அசல் வழக்கு எண் 04/1988 தள்ளுபடி செய்யப்பட்ட பிறகு எனது தாயார் அதை எதிர்த்து A.S. No. 25/1990 என்ற எண்ணில் மேல்முறையீடு தாக்கல் செய்தார் என்றால் சரிதான். அந்த A.S. No. 25/1990 என்ற மேல்முறையீடும் எனது தாயாருக்கு எதிராக தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது என்றால் சரிதான்.

2. A.S. No. 25/1990 பிறப்பிக்கப்பட்ட தீர்ப்புக்கு எதிராக எனது தாயார் சென்னை உயர்நீதிமன்றத்தில் S.A. No. 1638/1993 என்ற 2 வது மேல்முறையீட்டை தாக்கல் செய்தார் என்றால் 2 வது மேல்முறையீடு தாக்கல் செய்தது சரிதான், ஆனால் அதன் குறிப்பிட்ட எண்ணானது தவறானதாகும். நான் S.A. No. 1638/1993 என்ற எண் தவறானது என்று குறிப்பிடும் நிலையில் அதன் சரியான எண்ணை என்னால் கூறமுடியுமா என்றால் என்னால் ஆவணங்களை பார்த்துதான் கூறமுடியும். எனது தாயார் தாக்கல் செய்த 2 வது மேல்முறையீட்டு வழக்கு நிலுவையில் இருந்த நிலையில் எனது தாயார் 28.10.2006 அன்று இறந்துவிட்டார் என்றால் சரிதான்.

3. எனது தாயார் இறந்த பிறகு நான் மேற்படி 2 வது மேல்முறையீட்டு வழக்கில் என்னை தரப்பினராக சேர்த்துக்கொண்டேன் என்றால் சரிதான். தற்போது நான் எனது முதல் விசாரணை பிரமாண வாக்குமூலத்தில் கூறியுள்ள சங்கதியான நாங்கள் பழைய கதவு எண் 130, புதிய கதவு எண் 190-ல் மட்டும்தான் வசித்து வந்தோம் என்ற பிரதிவாதத்தை எனது தாயார் அசல் வழக்கு எண்

04/1988, முதல் மேல்முறையீட்டு வழக்கு எண் 25/1990 அல்லது 2 வது மேல்முறையீட்டு வழக்கு ஆகியவற்றில் எடுத்துள்ளாரா என்றால் எடுத்திருக்கலாம். 2 வது மேல்முறையீட்டு வழக்கில் நான் தரப்பினராக சேர்க்கப்பட்ட பிறகு நான் வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்து 2 வது மேல்முறையீட்டு வழக்கில் மேற்படி பிரதிவாதத்தை சேர்த்துள்ளேனா என்றால் ஏற்கனவே மேற்படி பிரதிவாதமானது எனது தாயாரால் எடுக்கப்பட்டுள்ளது.

4. அவ்வாறு மேற்படி பிரதிவாதத்தை குறிப்பாக எனது தாயார் எடுத்த பிறகும் அசல் வழக்கு எண் 04/1988 வாதிக்கு ஆதரவாக தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது மற்றும் முதல் மேல்முறையீட்டு வழக்கு எண் 25/1990 தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது தாயார் தாக்கல் செய்த 2 வது மேல்முறையீட்டு வழக்கின் எண் S.A. No. 1688/1993 என்றால் சரிதான். நான் 2 வது மேல்முறையீட்டு வழக்கு எண் 1688/1993-ல் தரப்பினராக சேர்க்கப்பட்ட பிறகு பழைய கதவு எண் 130 மற்றும் புதிய கதவு எண் 190-ல் மட்டும்தான் நாங்கள் வசித்து வந்தோம் என்ற பிரதிவாதத்தை 2 வது மேல்முறையீட்டு வழக்கில் கூடுதல் காரணங்களாக சேர்த்துள்ளேனா என்றால் நான் 2 வது மேல்முறையீட்டு வழக்கில் கூடுதல் காரணங்கள் எதையும் சேர்க்கவில்லை, ஆனால் எனது தாயார் மேற்படி பிரதிவாதத்தை ஏற்கனவே அசல் வழக்கில் எழுப்பியுள்ளார்.

5. எனது தாயார் வழக்கு சொத்தில் எல்லைகள் தவறாக உள்ளது என்ற எதிர்வாதத்தை அசல் வழக்கு எண் 04/1988, முதல் மேல்முறையீட்டு வழக்கு எண் 25/1990 மற்றும் 2 வது மேல்முறையீட்டு வழக்கின் எண் S.A. No. 1688/1993 ஆகியவற்றில் எழுப்பியுள்ளாரா என்றால் எழுப்பியுள்ளார். நான் 2 வது மேல்முறையீட்டு வழக்கு எண் 1688/1993-ல் தரப்பினராக சேர்க்கப்பட்ட பிறகு வழக்கு சொத்தின் எல்லைகள் தவறானது என்ற பிரதிவாதத்தை 2 வது மேல்முறையீட்டு வழக்கில் கூடுதல் காரணங்களாக சேர்த்துள்ளேனா என்றால் நான் 2 வது மேல்முறையீட்டு வழக்கில் கூடுதல் காரணங்கள் எதையும்

சேர்க்கவில்லை, ஆனால் எனது தாயார் மேற்படி பிரதிவாதத்தை ஏற்கனவே அசல் வழக்கில் எழுப்பியுள்ளார். அவ்வாறு மேற்படி பிரதிவாதத்தை குறிப்பாக எனது தாயார் எடுத்த பிறகும் அசல் வழக்கு எண் 04/1988 வாதிக்கு ஆதரவாக அனுமதிக்கப்பட்டுள்ளது மற்றும் முதல் மேல்முறையீட்டு வழக்கு எண் 25/1990 மற்றும் 2 வது மேல்முறையீட்டு வழக்கு எண் 1688/1993 ஆகியவை தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

6. நான் கூறுவதுபோல எனது தாயார் மேற்படி கதவு எண் 130-ல் மட்டும் வசித்து வந்தோம் என்று எதிர்வாதத்தையும், வழக்கு சொத்தின் எல்லைகள் தவறானது என்ற எதிர்வாதத்தையும் அசல் வழக்கு, முதல் மேல்முறையீட்டு வழக்கு மற்றும் 2 வது மேல்முறையீட்டு வழக்கில் எழுப்பவில்லை என்றும், மேற்படி எதிர்வாதங்களை முதல் முறையாக இந்த நிறைவேற்று மனுவில்தான் நான் எழுப்பியுள்ளேன் என்றும் சொன்னால் சரியல்ல. மேற்படி கதவு எண் 130-ல் மட்டும்தான் வசித்து வந்தோம், வழக்கு சொத்தின் எல்லைகள் தவறானது என்ற பிரதிவாதங்களை எனது தாயார் அசல் வழக்கு எண் 04/1988-ல் எழுப்பியிருந்து அது உண்மை என நிரூபிக்கப்பட்டிருந்தால் அசல் வழக்கு எண் 04/1988 அப்போதே தள்ளுபடி செய்யப்பட்டிருக்கும் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

7. மனு சொத்தானது மருத்துவமனை சாலையில் அமைந்துள்ளது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள எ.ம.சா.ஆ.9-க்கும் மனு சொத்திற்கும் தொடர்பில்லை என்றால் சரியல்ல. நான் கூறுவது உண்மையல்ல என்றும், மனு சொத்து மருத்துவமனை சாலையில் அமைந்துள்ள நிலையில் எ.ம.சா.ஆ.9 ஆனது Alms House Road-ல் உள்ள வேறு சொத்திற்கானது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள எ.ம.சா.ஆ.6 சிட்டா ஆவணத்தை பற்றி எனக்கு முழுமையாக தெரியுமா என்றால் தெரியும். நான் தாக்கல் செய்துள்ள எ.ம.சா.ஆ.6 சிட்டா ஆவணங்களில் முதலில் உள்ள சிட்டா ஆவணமானது வார்டு E, Block no. 12.

T.S. No. 66-ற்கானது என்றால் சரிதான், அதுதான் மனு சொத்தாகும்.

8. மேற்படி T.S. No. E/12/-66-ல் தான் பழைய கதவு எண் 130-ல் அமைந்துள்ளது என்றால் சரிதான். இந்த நிறைவேற்று மனுவானது T.S. No. E/12/-66-ல் உள்ள மொத்த சொத்துக்களுக்கும் சேர்த்துதான் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல, நிறைவேற்று மனுவானது வார்டு A-ல் உள்ள சொத்திற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது, ஆனால் வழக்கு சொத்தானது வார்டு E-ல் அமைந்துள்ளது. தற்போது என்னிடம் காட்டப்படும் அசல் நிறைவேற்று மனுவில் கூறப்பட்டுள்ள சொத்து விவரத்தில் என்ன வார்டு குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் நிறைவேற்று மனுவில் வார்டு எண்ணானது கையால் திருத்தப்பட்டு எழுதப்பட்டுள்ளது.

9. நான் எந்தவித அடிப்படை காரணமும் இல்லாமல் சொத்தினை அபகரிக்க வேண்டி வார்டு எண் தவறானது என்று பொய்யாக எதிர்வாதம் செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள எ.ம.சா.ஆ.6 சிட்டா ஆவணத்தில் T.S. No. E/12/-66-ல் Waqf Board தான் உரிமையாளர்கள் என்று காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த மனுவின் பெயரில் மனு சொத்தினை சுவாதீனம் எடுக்க சென்றபோது மனு சொத்தினை 02.12.2024 அன்று பார்வையிட்ட நில அளவையர், கிராம நிர்வாக அலுவலர் மற்றும் Municipal Bill Collector ஆகியோர்கள் பழைய கதவு எண் 130 மற்றும் புதிய கதவு எண் 190 ஆகியவை தவறானது என்றும், மனு சொத்தின் சரியான கதவு எண்கள் மனுவில் குறிப்பிட்டுள்ள கதவு எண்களான 131, 132 மற்றும் 133 தான் என்று கூறியுள்ளார்கள் என்றால் சரியல்ல.

10. நான் தாக்கல் செய்துள்ள எ.ம.சா.ஆ.5 ஆவணமானது ஏற்கனவே அசல் வழக்கு எண் 04/1988-ல் பி.வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி பி.வா.சா.ஆ.2 ஆவணத்தை பரிசீலனை செய்துதான் அசல் வழக்கு எண் 04/1988-ல் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான்

தாக்கல் செய்துள்ள எ.ம.சா.ஆ.1 குடும்ப அட்டைக்கும், மனு சொத்திற்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. மேற்படி எ.ம.சா.ஆ.1 குடும்ப அட்டையானது பாம்பே ஹால் என்ற இடத்தில் உள்ள வேறு சொத்திற்கானது என்பதால் மேற்படி ஆவணத்திற்கும், மனு சொத்திற்கும் தொடர்பில்லை என்றால் சரியல்ல.

11. எனது தாத்தா மேத்யூ என்பவர் மனு சொத்தின் அசல் வாடகைதாரர் என்றால் சரிதான். நான் பழைய கதவு எண் 130-ல் மட்டும்தான் குடியிருந்து வருகிறேன் என்ற எதிர்வாதத்தை முதன்முறையாக இந்த நிறைவேற்று மனுவில் உரிமையியல் நடைமுறைச்சட்டம் பிரிவு 47-ன் கீழ் தாக்கல் செய்த மனுவில்தான் முதல் முறையாக கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் பழைய கதவு எண் 130-ல் மட்டும்தான் குடியிருந்து வருகிறேன் என்று கூறும் நிலையில் மனுவில் கூறியுள்ள கதவு எண்கள் கொண்ட சொத்தினை மனுதாரருக்கு சுவாதீனம் கொடுப்பதில் எனக்கு என்ன ஆட்சேபனை உள்ளது என்றால் அது தொடர்பாக எனக்கு ஆட்சேபனை எதுவும் இல்லை.

12. நான் தாக்கல் செய்துள்ள முதல் விசாரணை பிரமாண வாக்குமூலம் பத்திகள் 8 முதல் 12 வரை கூறியுள்ள சங்கதிகளுக்கும், மனு சொத்திற்கும் தொடர்பில்லை என்றும் நான் மனு சொத்தினை அபகரிக்க வேண்டும் என்பதற்காகத்தான் தொடர்பில்லாத சங்கதிகளை முதல் விசாரணையில் கூறியுள்ளேன் என்றும் சொன்னால் சரியல்ல. நான் சென்னை வக்பு வாரியத்தின் முன்பு அசல் வழக்கு எண் 102/2018 தாக்கல் செய்திருந்தேன் என்றால் அது பற்றி எனக்கு தெரியவில்லை. A.A. ஜோசப். S/o. Late. அந்தோனி இந்திய கிறிஸ்துவர் Creswell cottage, Hospital Road, Ooty என்பது என்னை குறிக்கிறதா என்றால் சரிதான். நான் இந்த நிறைவேற்று மனுவில் தாக்கல் செய்துள்ள எதிருரையில் பத்தி-14-ல் மேற்படி வக்பு வாரியத்தின் முன்பாக தாக்கல் செய்த அசல் வழக்கு எண் 102/2018-ஐ பற்றி கூறியுள்ள நிலையில் தற்போது அது பற்றி தெரியாது என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன்

என்றால் அது பற்றி என்னால் ஆவணங்களை பார்த்துதான் கூற முடியும்.

13. மேற்படி அசல் வழக்கு எண் 102/2018 ஆனது 17.07.2025 அன்று தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டதால்தான் அது பற்றி எனக்கு தெரியாது என்று நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் அது பற்றி எனக்கு தெரியவில்லை. மேலும் அசல் வழக்கு எண் 102/2018-ல் R.S. No. 1817/4 -ல் உள்ள Creswell cottage முழுவதையும் வக்பு வாரியத்திற்கு சொந்தமான சொத்து என்று விளம்புகை செய்யக்கூடாது என்று பரிகாரம் கேட்டுள்ளதாலும் அந்த வழக்கு பற்றி தெரியாது என்றும் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

14. நான் கூறுவதுபோல நான் பழைய கதவு எண் 130 மற்றும் புதிய கதவு எண் 190-ல் மட்டும் குடியிருந்து வருவதாக இருந்தால் அது குறித்து நான் வக்பு வாரியத்தின் முன்பு தாக்கல் செய்த அசல் வழக்கு எண் 102/2018-ல் அது பற்றி கூறியிருப்பேன் என்றும், நான் மனு சொத்தில் குடியிருப்பதால்தான் அந்த வழக்கு அவ்வாறு எதுவும் கூறவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. நிறைவேற்று மனுவில் கூறப்பட்டுள்ள சொத்தானது எனது சுவாதீனத்தில்தான் உள்ளது என்றும், அதை நீதிமன்ற அமீனா, நில அளவையர், கிராம நிர்வாக அலுவலர் மற்றும் Bill Collector ஆகியோர் உறுதிப்படுத்தியுள்ளனர் என்றும் சொன்னால் சரியல்ல, நான் நீதிமன்ற அமீனா மற்றும் இதர நபர்களின் அறிக்கையை படிக்கவில்லை. நான் நீதிமன்ற அமீனாவின் அறிக்கையை படிக்கவில்லை என்று வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல.

15. நான் மனு சொத்தினை அபகரிக்க வேண்டும் என்பதற்காகத்தான் கதவு எண்களையும், சொத்தின் எல்லைகளையும் மாற்றி மாற்றி கூறுகிறேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள எ.ம.சா.ஆ.2 மின் கட்டண ரசீது மற்றும் எ.ம.சா.ஆ.3 மற்றும் எ.ம.சா.ஆ.4 குடிநீர் கட்டண ரசீதுகள் ஆகியவை

மனு சொத்திற்கு தொடர்பில்லாதது என்றால் சரியல்ல. இந்த நிறைவேற்று மனுவில் நான் ஆஜரானதற்கு பின்னிட்டு எனது சகோதரிகளான சாராஷீலா ஆண்டனி என்பவரை தூண்டிவிட்டு அவரையும் இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்க கோரி E.A. No. 02/2022 என்ற மனுவினை தாக்கல் செய்ய வைத்தேன் என்றால் சரியல்ல. மேற்படி E.A. No. 02/2022 ஆனது 24.03.2023 அன்று தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

16. நான் மேற்படி E.A. No. 02/2022 மனு பற்றி தெரியாது என்று கூறும் நிலையில் அந்த மனுவில் நான் எதிருரை தாக்கல் செய்தேனா என்றால் அது பற்றி எனக்கு தெரியவில்லை. நான்தான் நிறைவேற்று மனுவை காலதாமதம் செய்ய வேண்டி அவரை மனு தாக்கல் செய்ய வைத்தேன் என்றும், ஆனால் தற்போது தெரியாது என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. மேற்படி E.A. No. 02/2022 தள்ளுபடி செய்யப்பட்ட பிறகு நான் E.A. No. 02/2023 என்ற உரிமையியல் நடைமுறைச்சட்டம் பிரிவு 47-ன் கீழான மனுவினை தாக்கல் செய்தேன் என்றால் அது பற்றி எனக்கு ஞாபகம் இல்லை. நான் மேற்படி E.A. No. 02/2023 என்ற மனுவில் சாட்சியம் அளித்து தற்போது முதல் விசாரணை பிரமாண வாக்குமூலத்துடன் தாக்கல் செய்துள்ள குடும்ப அட்டை, மின் கட்டண ரசீது மற்றும் குடிநீர் கட்டண ரசீது ஆகியவற்றை அந்த மனுவிலேயே தாக்கல் செய்துள்ளேன் என்றால் அது பற்றி தற்போது எனக்கு ஞாபகம் இல்லை.

17. மேற்படி E.A. No. 02/2023-ல் கதவு எண் மற்றும் சொத்தின் எல்லைகள் குறித்து கூறியிருந்தேனா என்றால் அது பற்றி எனக்கு தற்போது ஞாபகம் இல்லை. தற்போது என்னிடம் காட்டப்படும் E.A. No. 02/2023 மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள பிரமாண வாக்குமூலத்தில் கண்டுள்ள 7 கையொப்பங்களும் என்னுடையதுதான் என்றால் சரிதான். **(மேற்படி E.A. No. 02/2023 மனுவுடன் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சாட்சியின் கையொப்பங்கள் ம.சா.ஆ.3 வரிசையாக குறியீடு**

**செய்யப்படுகின்றன). மேற்படி** E.A. No. 02/2023 ஆனது 27.03.2024 அன்று தள்ளுபடி செய்யப்பட்டதால்தான் மேற்படி மனு பற்றி எனக்கு தெரியவில்லை என்று தற்போது பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

18. E.A. No. 02/2023-ல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவிற்கு எதிராக நான் மேல்முறையீடு தாக்கல் செய்துள்ளேனா என்றால் உயர் நீதிமன்றத்தில் மேற்படி மனுவில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவிற்கு எதிராக மேல்முறையீடு தாக்கல் செய்துள்ளேன். (**சாட்சி தற்போது அது பற்றி தனக்கு தெரியாது என்று சாட்சியம் அளிக்கிறார்) (மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் சாட்சி தனது வழக்கறிஞர் செய்கை செய்ததன் அடிப்படையில் தற்போது தனது சாட்சியத்தை மாற்று கூறுவதாக ஆட்சேபனை செய்து ஆட்சேபனை பதிவு செய்யப்படுகிறது, சாட்சி மற்றும் எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் இருவருக்கும் சாட்சியம் பதிவு செய்து முடிக்கப்படும்வரை எந்தவிதமான செய்கையும் செய்யாமல் இருக்க அறிவுறுத்தப்படுகிறது**).

19. நான் E.A. No. 02/2022 என்ற மனு பற்றி தெரியாது என்று கூறியுள்ள நிலையில் எனது வழக்கறிஞர் மேற்படி மனுவில் அறிவிப்பை ஏற்று கையொப்பம் செய்துள்ளார் என்றால் சரிதான். மேலும் மேற்படி மனுவில் எனது வழக்கறிஞர் எதிருரை எதுவும் இல்லை என்று மேற்குறிப்பு செய்துள்ளார் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள முதல் விசாரணை பிரமாண வாக்குமூலம் பத்தி-15-ல் குறிப்பிட்டுள்ள அசல் வழக்கு எண் 103/1968 தொடர்பான ஆவணங்களை இந்த மனுவில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் அந்த வழக்கில் நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்துள்ள அறிக்கையினை தாக்கல் செய்துள்ளேன்.

20. நான் தூய்மையான கரங்களுடன் இந்த வழக்கினை எதிர்வழக்காடவில்லை என்பதால் மனு அனுமதிக்கப்படத்தக்கது என்றால் சரியல்ல. மனு சொத்தினை எவ்வாறாவது அபகரிக்க வேண்டும் என்பதால்தான்

முதல் விசாரணையில் சம்பந்தமில்லாத சங்கதிகளை கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. மனுப்படி சுவாதீனத்தை மனுதாரரிடம் ஒப்படைக்க வேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**: இல்லை

L. Prakash

Digitally signed by L. Prakash
Date: 2025.11.17 17:11:41 +0530